வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November- 2017

| தரம் :- 12 (2019) | வணிகக்கல்வி | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 31 - 25 | |
| மொத்தம் | |

01) பின்வரும் கூற்றுக்களில் வணிக நடவடிக்கையினை தெளிவுபடுத்தும் கூற்றினைத் தெரிவு செய்க.

1) சந்திரிகா ஆடை தயாரிப்பது தொடர்பாக விசேட திறமையினைக் கொண்டுள்ள அதே வேளை அவள் தனது புதல்விகளுக்காக நவீன அலங்காரங்களுடன் கூடிய ஆடைகளைத் தயாரிக்கின்றார்.

2) தனி நபரொருவருக்குரிய காணியொன்றை அவரினால் வேறொரு தனிநபருக்கு விற்பனை செய்யப்படுதல்.

3) தயிர் உற்பத்தி செய்யும் ஒருவர் தயிர்ச்சட்டிகளை சில்லறை வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்தல்.

4) தந்தை தனது மகனுக்குக் காணியொன்றை நன்கொடை உறுதிப்பத்திரத்தின் மூலம் ஒப்படைத்தல்.

5) தாய் தனது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளைத் தினந்தோறும் உணவிற்காகப் பயன்படுத்தல். (.........)

02) பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் நோக்கமாகக் கருத முடியாதது எது?

1) சந்தையில் நிலைத்திருத்தல்
2) விற்பனையை உச்சப்படுத்தல்
3) சந்தைப் பங்கை அதிகரிக்கச் செய்தல்
4) வேலை வாய்ப்புகளை உச்சப்படுத்தல்
5) வணிகரின் தனிப்பட்ட திருப்தி (.........)

03) பின்வருவனவற்றுள் வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்கு அல்லாதது எது?

1) பூகோளமயமாதல்
2) கைத்தொழில் புரட்சி
3) இலத்திரனியல் வணிகம்
4) சூழல் தொடர்பான அவதானம்
5) சமூகப்பொறுப்பு தொடர்பான அக்கறை (.........)

04) பின்வரும் வித்தியாசமான பொருளாதார துறைகள் தொடர்புடைய சில பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இவற்றுள் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1) கரும்புச் செய்கையும், புகையிலைச் செய்கையும்
2) வியாபாரம் போக்குவரத்துச் சேவைகள், மற்றும் விடுதி வசதி
3) தகவல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள்
4) வனவளம் மரம் அறுத்தல், மற்றும் காட்டு வளத்துடன் தொடர்பான உற்பத்திகள்.
5) மின்சாரம், வாயு, வெப்பம், மற்றும் குளிரூட்டல் வழங்கல். (………)

05) பின்வரும் அட்டவணையானது சில வணிகக் கருமங்களையும் அக்கருமங்களுக்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| வணிகக் கருமங்கள் | உதாரணங்கள் |
|---|---|
| A. நிர்வாகம் | 1. உற்பத்தியினை மேம்படுத்தல் |
| B. உற்பத்தி | 2. நிதியினைப் பெற்றுக் கொள்ளல் |
| C. சந்தைப்படுத்தல் | 3. தேவையான ஆலோசனைகளை வழங்கல் |
| D. நிதிக்கருமங்கள் | 4. மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல். |
| E. ஆய்வு அபிவிருத்தியும் | 5. விலையினைத் தீர்மானித்தல் |

வணிகக்கருமங்களும் உதாரணங்களும் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) A-3, B-1, C-2, D-5, E-4 2) A-4, B-1, C-5, D-2, E-3 `3) A-3, B-4, C-5, D-2, E-1
4) A-2, B-4, C-3, D-5, E-1 5) A-5, B-2, C-5, D-1, E-3 (………)

06) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. சந்தைப் பங்கினை அறிந்து கொள்வதற்கு
B. வணிகத்தின் இலாபத்தை உயர்த்துவதற்கு
C. உயர்ந்த சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு
D. வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு
E. முகாமைத்துவத் தீர்மானங்களின் வெற்றி தோல்வியினை அறிந்து கொள்வதற்கு
F. வணிகத்தின் நீண்டகால வாழ் தன்மையினை உறுதிப்படுவதற்கு

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது முகாமையாளர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, C 2) B, D, E 3) B, C, E 4) C, D, E 5) D, E, F (………)

07) பின்வரும் அட்டவணையில் X நிரலானது வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினரையும் Y நிரலானது அப்பிரிவினர் வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான சில காரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. உரிமையாளர் | 1. செயற்றிறனை அதிகரித்துக் கொள்வதற்கு |
| B. ஊழியர்கள் | 2. பொருள் அல்லது சேவை தொடர்பில் சந்தைப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு. |
| C. அரசு | 3. வணிகத்தின் வாழ் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு. |
| D. வாடிக்கையாளர் | 4. தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு. |

அக்கறை காட்டும் பிரிவினரையும் அப்பிரிவினர் வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியை தெரிவு செய்க.

1) A-2, B-4, C-3, D-1 2) A-3, B-4, C-1, D-2 3) A-1, B-3, C-4, D-2
4) A-3, B-1, C-4, D-2 5) A-4, B-1, C-2, D-3 (………)

08) A. போட்டித்தன்மை குறைதல்
B. புதிய உற்பத்தி முறைகள்
C. அதிவேகம் பாதைகளை நிர்மாணித்தல்
D. அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன் முறைகளை அறிமுகப்படுத்தல்.
E. நுகர்வோரின் வாழ்க்கைப் பாங்கு (Life style) மாற்றமடைதல்
F. பொருளாதார மந்தம்
G. பொருத்தமான அமைவிடம்

மேலுள்ளவற்றுலிருந்து வணிக வாய்ப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A, B, C, G 2) A, C, D, E 3) B, D, E, G 4) C, D, E, G 5) A, B, D, E (………)

09) பின்வரும் அட்டவணையானது பேரினச் சூழல் காரணிகளையும் அக்காரணிகளுக்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| பேரினச்சூழல் காரணிகள் | உதாரணங்கள் |
|---|---|
| A. தொழில்நுட்பச் சூழல் | 1. திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றல் |
| B. சமூகக்கலாசாரச் சூழல் | 2. சர்வதேச ரீதியாக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்படல் |
| C. அரசியல் சூழல் | 3. பொருள்கள் காலம் கடந்தவைகளாதல் |
| D. சட்டச் சூழல் | 4. முதியோரை நினைவு கூறும் விசேட நிகழ்வு |
| E. பூகோளச் சூழல் | 5. தொழிலாளர் சட்டதிட்டங்கள் |

பேரினச்சூழல் காரணிகளும் உதாரணங்களும் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) A-3, B-4, C-2, D-1, E-5 2) A-1, B-4, C-5, D-2, E-3 3) A-1, B-3, C-5, D-4, E-2
4) A-5, B-4, C-3, D-1, E-2 5) A-3, B-4, C-1, D-5, E-2 (………)

The National e-learning Portal for The General Education

10) வணிகத்தின் அகச்சூழல் தொடர்பான ஒரு பலத்தையும் புறச்சூழல் தொடர்பான ஒரு வாய்ப்பையும் ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) சிறந்த நிதி உறுதித்தன்மையும் ஊழியர்களின் விசேடமான திறன்களும் அர்ப்பணிப்பும்.
2) புதிய உற்பத்தி முறைகள் இருத்தலும் நுகர்வோரின் வாழ்க்கைப் பாங்கு மாற்றமடைதலும்.
3) வணிகங்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதலும் அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன் முறைகளை அறிமுகப்படுத்தலும்.
4) உறுதியாகத் தாபிக்கப்பட்டுள்ளன. வியாபாரச்சின்னம் காணப்படலும் புதிய வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அதிகளவான நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளமையும்.
5) உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான மதிப்புயர்வும் சனத்தொகை வயது அதிகரித்தலும்.

(………)

11) வணிகத்தை வகைப்படுத்தும் நியதி அல்லாதது எது?

1) வாழ் தன்மையின் அடிப்படையில்
2) உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்
3) உற்பத்தித் துறையின் அடிப்படையில்
4) பருமனின் அடிப்படையில்
5) நோக்கத்தின் அடிப்படையில்

(………)

12) ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் ஜனாதிபதியான ஜோன் ஒவ் கெனடி அவர்கள் பிரகடனப்படுத்திய நுகர்வோர் உரிமைகள் நான்கையும் சரியாகக் குறிப்பிடும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல் / தெரிவு செய்தல் / இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளல் / நுகர்வோர் கல்வி
2) தெரிவு செய்தல் / தகவல்களை அறிந்து கொள்ளல் / சுகாதாரமான சூழலில் வாழுதல் / நுகர்வோர் கல்வி
3) தெரிவு செய்தல் / செவிமடுக்கச் செய்தல் / இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் / நுகர்வோர் கல்வி
4) பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல் / தகவல்களை அறிந்து கொள்ளல் / தெரிவு செய்தல் / செவிமடுக்கச் செய்தல்
5) பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல் / தகவல்களை அறிந்து கொள்ளல் / தெரிவு செய்தல் / சுகாதாரமான சூழலில் வாழுதல்

(………)

13) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு விவகாரத்தில் சம்பந்தப்படாத நிறுவகத்தை தெரிவு செய்க.

1) இலங்கை தர கட்டளைகள் பணியகம்
2) மத்திய சுற்றாடல் அதிகாரசபை
3) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
4) அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்
5) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை

(………)

The National e-learning Portal for The General Education

14) நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.

A. தகவலைப் பெறுதல் | B. அறிவைப்பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை
C. சமூகம் தொடர்பான அக்கறை | D. தெரிவு
E. சுகாதாரமான சூழலில் வாழுதல் | F. சூழல் தொடர்பான கவனம்
G. கவனத்தை ஈத்தல் | H. தொடர்ச்சியான பங்களிப்பு

மேலே உள்ளவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, D, F 2) B, C, F, H 3) B, E, G, H 4) B, C, E, F 5) C, F, G, H (………)

15) ஓர் உற்பத்திப் பொருள் மீதான SLS குறி எதனை குறித்து நிற்கிறது.

1) உற்பத்திப் பொருளின் விலை நியாயமானது என்பதை
2) உற்பத்திப் பொருளின் தரம் மிக உயர்ந்தது என்பதை
3) உற்பத்திப் பொருள் காலாவதியாகவில்லை என்பதை
4) உற்பத்திப் பொருள் நுகர்வோரின் சுவைக்கு அமைவானது என்பதை
5) உற்பத்திப் பொருள் குறித்த நியமமொன்றுக்கு அமைவானது என்பதை (………)

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

16) அ) வியாபாரம் தோன்றியது ……………………………………………… என்பதிலிருந்து ஆகும்.

ஆ) ……………………… மற்றும் ……………………… ஆகியோரைக் காணக்கூடியதும் தொடர்புகளைப் பேணுவதுமான ஏதேனும் ஒரு வடிவம் சந்தை எனப்படும்.

17) அ) மிகை உற்பத்தியை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் ……………… ……………………… என அழைக்கப்படும்.

ஆ) நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொருள்கள் ……………………………………………… எனப்படும்.

18) அ) வணிகத் திட்டங்களைத் தயாரித்தல் தீர்மானமெடுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர் ……………………………………… என அழைக்கப்படுவார்.

ஆ) நிறுவனத்தின் நோக்கத்தினை இலகுவாக அடைந்து கொள்ளக்கூடியவாறு அமைப்பின் கருமங்கள், வளங்கள், அதிகாரம் என்பன பிரிந்து செல்லும் முறை …………………… ……………………….. எனப்படும்.

19) அ) பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினருள், வணிகங்கள் தனது பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ……………………… மீது முக்கியத்துவம் செலுத்துகின்ற அதேவேளை தொடர்ச்சியாக தேவைப்படுகின்ற நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக ……………………………… இன் மீது முக்கியத்துவம் கொள்கின்றன.

ஆ) ……………………………. ஐயும் ……………………………. ஐயும் பேரினச் சூழலைப் பற்றி அறிந்து கொள்வதனால் அடையாளப்படுத்த முடியும்.

20) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி பிழையைக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| 1) வளங்களை அவற்றின் இயற்கையான வடிவத்திலேயே பயன்படுத்துதல் இரண்டாம் நிலை வணிகமாகும். | |
| 2) வலையமைப்பினூடாகக் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம் பெறுவது இலத்திரனியல் வணிகம் எனப்படும். | |
| 3) பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகப் பரிமாற்றூடகமாகப் பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. | |
| 4) வியாபாரம் மற்றும் துணைச்சேவைகள் என்பவற்றின் சேர்க்கை வணிகம் எனப்படும். | |

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

21) வணிகமொன்றினால் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய நான்கு பிரிவினர்களை எழுதுக.

1) ………………………………………… 2) …………………………………………

3) ………………………………………… 4) …………………………………………

22) வழங்குனர்கள் வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய நான்கு வழிகளை எழுதுக.

1) ……………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………

23) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் சேகரிக்கப்படும் வரிகள் நான்கைப் பெயரிடுக.

1) ……………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………

24) பொருளாதாரத்தின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………

25) இலங்கைத்தரக் கட்டளைகள் நிறுவனத்தால் தர நியமங்களை நடைமுறைப்படுத்தும் நான்கு முறைகளை எழுதுக.

1) ……………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………

4) ……………………………………………………………………………………

The National e-learning Portal for The General Education

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உ/த)தவணைப் பரீட்சை**

# Field Work Centre

FWC

**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017**
**Term Examination, November - 2017**

| தரம் :- 12 (2019) | வணிகக்கல்வி | |
|---|---|---|

**பகுதி II**

❖ அறிவுறுத்தல்கள்

**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி - I**

*1.*

(i). மனித தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான தொடர்பையும் அவற்றுக்கிடையிலான வேறுபாட்டையும் தெளிவுபடுத்துக. (2 புள்ளிகள்)

(ii). வணிகமொன்றின் பண்புகள் நான்கைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii). "வணிகங்கள் அடிக்கடி இடர்களுக்கும் நிச்சயமற்ற தன்மைகளுக்கும் முகம் கொடுக்கின்றன" இவ்வாறான நிலைமைகளுக்கான காரணிகளை விபரிக்குக.(2 புள்ளிகள்)

(iv). பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்யக்கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(v). வணிகத்தின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய கட்டங்களை எழுதுக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*2.*

(i). பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப்பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறையினை பட்டியல் படுத்துக. (2 புள்ளிகள்)

(ii). "நேர் உற்பத்தி" இற்கும் நேரில் உற்பத்தி" இற்கும் இடையிலான வேறுபாட்டை விபரித்து பொருத்தமான உதாரணங்களையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii). "வர்த்தகம் என்பது வியாபாரத்திலும் கூடுதலான ஒன்றாகும். ஆயினும் வியாபாரம் இன்றி வர்த்தகம் இடம் பெறமுடியாது" விளக்குக. (2 புள்ளிகள்)

(iv). பண்டமாற்று முறைமையின் வரையறைகள் இரண்டை விபரிக்குக. (2 புள்ளிகள்)

(v). வணிகச் செயற்பாடுகளை உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறையொன்றாக வரைபடமொன்றின் மூலம் காட்டுக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*3.*

(i). பொருள்களுக்கும் சேவைகளுக்கும் இடையே காணப்படும் நான்கு வேறுபாடுகளை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii). வணிகச் சூழலைக் கற்பதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii). நிறுவனக் கலாசாரமும் நிறுவனக் கட்டமைப்பும் தனித்தனியே வணிகமொன்றுக்கு எவ்வாறு பலமாகவும், பலவீனமாகவும் அமையும் என்பதனை எடுத்துக் காட்டக்கூடியவாறு ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக. (2 புள்ளிகள்)

The National e-learning Portal for the General Education

(iv). மக்கட்சூழல், சட்டச்சூழல் தனித்தனியே வணிகமொன்றுக்கு எவ்வாறு சந்தர்ப்பமாகவும் அச்சுறுத்தலாகவும் அமையும் என்பதை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(v). சமூகப் பொறுப்பு, வணிக ஒழுக்க விழுமியம் என்றால் என்ன என்பதனை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

4.

(i). வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் பொதுவாகச் சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளன. அக்காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. *(2 புள்ளிகள்)*

(ii). சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனூடாக வணிக மொன்று பெற்றுக்கொள்ளக் கூடிய நான்கு நன்மைகளை எழுதுக. *(2 புள்ளிகள்)*

(iii). வணிகமானது சூழல் நிலைபேறான தன்மை கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யக் கூடிய நான்கு வழிகளைச் சுருக்கமாக விளக்குக. *(2 புள்ளிகள்)*

(iv). கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் போது மீள் சுழற்சியினை இரு முறைகளில் வெளியீடுகள் கிடைக்கக் கூடியவாறு மேற்கொள்ள முடியும் உதாரணத்துடன் விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(v). கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் "மீள் உருவாக்கம்" (Replace) என்ற எண்ணக்கருவை விபரித்து அதற்கு உதாரணமொன்று தருக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

5.

(i). மத்திய அரசு வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய இரண்டு காரணிகளை உதாரணங்களுடன் விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(ii). அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யக்கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(iii). பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கும் இறக்குமதியின் மீதான வரிக்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. *(2 புள்ளிகள்)*

(iv). நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) என்றால் என்ன என்பதனை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(v). அரச செலவினங்களின் பிரதான பகுதிகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள் )*

6.

(i). தற்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பானது கூடிய முக்கியத்துவமாக இருப்பதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(ii). நுகர்வோர் உரிமைகள் பொறுப்புக்களின் அடிப்படையில் பகுத்தறிவுள்ள நுகர்வோரொருவரின் நடத்தை எவ்வாறு இருக்கும் என்பதை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(iii). நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையானது வணிகங்களுக்கு முக்கியத்துவம் பெறும் முறையினைச் சுருக்கமாக விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

(iv). இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் தர்க்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் யாவை? *(2 புள்ளிகள்)*

(v). இலங்கை தரக்கட்டளைகள் பணியகம் வணிகர்களுக்கு முக்கியத்துவம் பெறும் நான்கு முறையினை விபரிக்குக. *(2 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*